# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2003/05 - 2017 ජනවාරි මස 23 වැනි සඳුදා - 2017.01.23

2003/05 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 23 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: HAK/LND/1/5

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை/ ஆட்சி உரிமையை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தின் ஹக்மன பிரதேச செயலகப் பிரிவின் கந்த பட பத்துவ கிழக்கு சிறுபிரிவின் வேபத்தஇர தெற்கு கிராமத்தில் அமைந்துள்ள, மாத்தறை மாவட்டத்தின் நில அளவையாளர் நாயகத்தினால் அளவிடப்பட்டு தயாரிக்கப்பட்ட இறுதிக் கிராமப் பட இல. 184 இல் தாள் இலக்கம் 12 இல் காட்டப்பட்டுள்ள காணித் துண்டின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளது.

**1. துண்டு இலக்கம் 259 - காணியின் பெயர்: பாலமஹத்தயாகே வத்த ; உரிமை கோருபவர்: எச். பீ. பீ. த சில்வா, எச். எம். ஹில்டா சிறியானி, எச். பீ. வயலட், எச். பீ பியசீலி வயலட் எதிரிசூரிய; விஸ்தீரணம்: 0.2092 ஹெக்டயார்.**

வடக்கு: துண்டு இலக்கம் 100; கிழக்கு: துண்டு இலக்கங்கள் 100, மற்றும் 150; தெற்கு: துண்டு இலக்கம் 150; மேற்கு: துண்டு இலக்கம் 100.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகார மளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2017 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 27 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு, ஹக்மன பிரதேச செயலகத்தில் என்முன்பாக தோன்றும் படியும்,

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும், 2017 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 20 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

குஸலக்க நாநாயக்கார,
பிரதேச செயலாளர்/
காணி கொள்வனவு உத்தியோகத்தர்,
ஹக்மன.

பிரதேச செயலகம்,
ஹக்மன,
2017, சனவரி 17.

2 - 320

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

திருத்தம்

## 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: ப/ இ/1/3/1.
காணி அமைச்சின் இல.: 03/ஜே/ 86/68/ எச் ஏ/346.

மொனராகலை மாவட்டத்தின் படல்கும்புர பிரதேச செயலாளரினால், 2016.11.23 ஆந் திகதிய 1994/42 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 7 வது வாசகத்தின் கீழான வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டிருந்த 0.0812 ஹெக்டயார் விஸ்தீரணம் என்பதற்குப் பதிலாக அதன் விஸ்தீரணமானது 0.812 ஹெக்டயார் என்றவாறு திருத்தப்படல் வேண்டுமென இத்தால் அறிவிக்கின்றேன்.

கசுன் எஸ்.கே. வெல்லஹேவா,
பிரதேச செயலாளர்,
படல்கும்புர.

பிரதேச செயலகம்,
படல்கும்புர,
2017, தை 18.

2 - 321